# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி
# O.S.No. 130/2023

16.06.2026 PW-1

| | |
|---|---|
| பெயர் | சசிகுமார் |
| த.பெ. | சுப்பையா |

**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. சென்ற முறை குறுக்கு விசாரணை செய்த சமயத்தில் 2-ம் தபசில் சொத்தினை பொறுத்து பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் பட்டா எண். 202 வழங்கப்பட்டுள்ளது தெரியாது என்று நான் பதில் அளித்த பின் இன்று சாட்சியம் அளிக்க வருவதற்கு முன் அந்த பட்டாவை பற்றி பரிசீலனை செய்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. மேற்படி பட்டா தொடர்பாக குமார் என்பவருக்கு தெரியும். 2-ம் தபசில் சொத்திற்கு தென்புறமாக அமைந்துள்ள சொத்தின் சர்வே எண். 278/2A, பிராது 1-வது தபசில் சொத்து என்றால் சரிதான். 1-வது தபசில் சொத்தின் மேற்கே சர்வே எண். 277 அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த சர்வே எண் 277 ல் தான் நான் வீடு கட்டியுள்ளேன் என்று சொன்னால் அதற்கும் மேற்கே நான் வீடு கட்டியுள்ளேன்.

2. பிரதிவாதியின் தந்தை பெயர் செல்லையா. அவருக்கு இந்த பிரதிவாதி மட்டும் தான் வாரிசா என்றால் இல்லை, மற்றொருவர் உள்ளார் அவரது பெயர் எனக்கு சரியாக தெரியாது. தபசில் சொத்துகள் குடியிருப்பு நத்தம் என்றால் சரிதான். நான் பிரதிவாதி 2-வது தபசில் சொத்தினை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி வருகிறார் என்று கட்சி செய்து வருகிறேன் என்றால் சரிதான்.

3. பழவூர் கிராம புல வரைபடத்தில், சர்வே எண். 278/7B, 278/7C சொத்துக்களுக்கு தெற்கே பிராது 1 வது தபசில் சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். 1 வது தபசில் சொத்திற்கு மேற்கே புல எண். 277 மற்றும் 276 அமைந்துள்ளது என்றால் சரிதான். எனக்கு நில உடைமை பதிவேடு திட்டம் தொடர்பான விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது.

4. நில உடைமை பதிவேடு திட்டத்திற்கு முன்பு யார் பெயர் பிராது 2 வது தபசில் சொத்து வருவாய் துறை ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டிருந்தது என்றால் தெரியாது. எதிர் வழக்குரையில் அதை குறிப்பிட்ட பின்னரும் அதை பற்றி தெரிந்து கொள்ள நான் முயன்றேனா என்றால் இல்லை. நான் மற்ற வாதிகளுக்காக பொது அதிகாரம் பெற்ற நபர் என்ற நிலையில் தான் வழக்கினை தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்ய நான் பொது அதிகாரம் பெற்றுள்ளேனா என்றால் வாய்மொழியாக தான் அதிகாரம் பெற்றுள்ளேன்.

5. நான் 2–வது தபசில் சொத்து தெரு நடைபாதை என்பதை காட்ட ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். 2–ம் தபசில் சொத்து பிரதிவாதியின் தகப்பனார் நெடுங்காலமாக அனுபவித்து வந்ததின் அடிப்படையில் பட்டா எண். 202 அரசாங்கத்தால் வழங்கப்பட்டு அவருக்கு தனிப்பட்ட முறையில் உரிமையுள்ள சொத்து என்றால் எங்கள் இடத்தை நெல் களமாக பயன்படுத்த போது 2–வது தபசில் சொத்தினை பாதையாக தான் ஊர் மக்கள் பயன்படுத்தினார்கள். நான் தற்போது சொன்ன விவரத்தை என்னுடைய வழக்குரை மற்றும் நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

6. ஊர் மக்கள் பாதையாக பயன்படுத்தியதாக நான் கூறும் போது ஊர் மக்களுக்காகவும் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, அது எங்கள் சொத்து என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தற்போது தான் முதல் முறையாக 2 வது தபசில் சொத்தினை ஊர்மக்கள் பயன்படுத்தியதாக சொல்கிறேன் என்றால் ஆமாம். நாங்கள் 75 வருடங்களாக 2 வது தபசில் சொத்தினை தெருவாக பயன்படுத்தி வந்ததை காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு.

7. என் மீது பிரதிவாதி பழவூர் காவல் நிலையத்தில் 2023 பிப்ரவரி மாதத்தில் ஒரு புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வாசாஆ.5 ல் 2 வது தபசில் சொத்தினை குறிப்பிடும் வகையில் சர்வே எண் எதுவும் காணப்படவில்லை என்று சொன்னால் சரிதான். சர்வே எண். 278/2 A என்று குறிப்பிட்டுள்ளது தாவா 1 வது தபசில் சொத்து என்றால் சரிதான். வாசாஆ.5 புகாரின் மீது விசாரணை நடைபெற்றது. அதன் வாக்குமூலங்கள் எதுவும் என்னிடம் உள்ளதா

என்றால் அதை நான் தேடி பார்க்கவேண்டும். அவ்வாறு தேடி பார்த்து கிடைத்தால் என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலும்.

8. பிரதிவாதிகளின் தகப்பனார் செல்லையா 2011 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 2 வது தபசில் சொத்து எந்த காலத்திலும் தெருவாகவும், நடைபாதையாகவும் இருந்தது இல்லை என்றும், அதை 75 வருடங்களாக நடைபாதையாக பயன்படுத்தி வந்ததாகவும் அதை பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து வீடுகட்ட முயற்சி செய்து வருவதாக சொல்வதும், அது தொடர்பாக 18.02.2023 ல் புகார் கொடுத்ததாக சொல்வதும், காவல் நிலையத்தில் பிரதிவாதி எச்சரித்து அனுப்பபட்டதாக சொல்வதும், 2 வது தபசில் சொத்தில் பிரதிவாதிக்கு உரிமையோ அனுபவமோ இல்லை என்று குறிப்பிட்டுள்ளதும் வழக்கிற்காக சொல்லப்படும் உண்மைக்கு புறம்பான சங்கதிகள் என்று சொன்னால் தவறு.

9. 2 வது தபசில் சொத்தினை நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் அடிப்படையில் தவறுதலாக தெரு என்று குறிப்பிடப்பட்டுள்ளதை நான் எங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி அதனை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் தவறு. பிரதிவாதியின் தகப்பனார் செல்லையா 2 வது தபசில் சொத்தை தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து பட்டா பாஸ்புக் வழங்கப்பட்டு அவர் காலம் சென்ற பின்னர் பிரதிவாதியால் அது ஆண்டு அனுபவம் செய்து வரப்படுகிறது என்று சொன்னால் தவறு.

10. கடந்த 2015 ல் பிராது 2 வது தபசில் சொத்தினை பிரதிவாதி நில அளவை துறையின் மூலம் அளவீடு செய்து எல்கை நிர்ணயம் செய்து வேலி அமைத்து அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் தவறு, வேலி எதுவும் இல்லை. நில உடைமை மேம்பாட்டு திட்டத்தில் ஏற்பட்ட பிழையை சரி செய்ய பிரதிவாதி நடவடிக்கை எடுத்துள்ளார் என்று சொன்னால் தெரியும். இந்த வழக்கு தாக்கல் செய்ய வழக்கு மூலம் எதுவும் ஏற்படவில்லை என்றும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் தவறு.

11. பிராது தபசில் சொத்தின் கிழக்கு மற்றும் மேற்கே அமைந்துள்ள பாதைகள் வழியாக தான் பிராது 1 வது தபசில் சொத்திற்கு சென்று வருகிறேன் என்றும், எந்த காலத்திலும் பிராது 2 வது தபசில் சொத்தில் புழங்கியது

இல்லை என்று சொன்னால் தவறு. வழக்கு சொத்தில் வேலி போடப்பட்டுள்ளது என்றும், வழக்கிற்காக இல்லை என்று சொல்கிறேன் என்றால் தவறு. இவ்வழக்கில் தேவையான பரிகாரத்தை கேட்கவில்லை என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் தவறு.

Deposition uploaded on 16.06.2026

VENKATACHALAM MONIKA

Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.06.16 15:39:45 +0530

Principal District Munsif,
Tirunelveli.